## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : பொன்னுசாமி | ஜாதி | : -- |
| வயது | : 57 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : பொறியாளர் இந்திய விமானப்படை | வட்டம் | : திருத்தணி |

**26.11.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. எனக்கு தமிழ்நாடு 1950ம் வருடத்து 3வது சட்டத்தின் சேர்ந்த 5வது பிரிவின் கீழ் 01.04.2013ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன். **(அறிவிப்பு வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனக்கு தமிழ்நாடு 1950ம் வருடத்து 3வது சட்டத்தின் சேர்ந்த 5வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன். **(அறிவிப்பு வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.10.2019ம் தேதியிட்ட சொத்து வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(சொத்து வரி ரசீது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 04.02.2023ம் தேதியிட்ட சொத்து வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(சொத்து வரி ரசீது வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 17.04.2000ம் தேதியிட்ட வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 20.04.1998ம் தேதியிட்ட வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 09.09.2023ம் தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீது வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 16.05.2023ம் தேதியிட்டு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திரும்பி வந்த அஞ்சல் உறைகள் (5 எண்ணம்) தாக்கல்

செய்கிறேன். **(அஞ்சல் உறைகள் வா.சா.ஆ 9 வரிசை (5 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது குடும்ப அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(குடும்ப அட்டை வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது ஆதார் அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(ஆதார் அட்டை வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. எனது மனைவியின் ஆதார் அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(ஆதார் அட்டை வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மின் கட்டண அட்டை அசல் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண அட்டை வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)